உடனடி வெளியிட்டுக்காக

# மை மெயின் ஸ்ட்ரீட் (My Main Street) அமைப்புடன் கூட்டு வைப்பதன் மூலமாக ஆறு பிரதான வீதிகளை மறு உயிரோட்டம் பெறச்செய்வதற்காக $945K அளவிலான நிதி முதலீட்டினை ப்ராம்ப்ட்டன் நகரம் பெறுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 24, 2022) – ப்ராம்ப்ட்டன் சமுதாயத்தினரின் ஆறு பிரதான வீதிகளுக்கு மறு உயிரோட்டம் கொடுப்பதற்கான ஆதரவுக்காக மை மெயின் ஸ்ட்ரீட் அமைப்பின் உள்ளூர் செயல்பாட்டு முடுக்கி திட்டம் (My Main Street Local Business Accelerator program) மூலமாக திருப்பிச் செலுத்தத் தேவையில்லாத வகையில் $945,000 நிதியானது ப்ராம்ப்ட்டன் மாநகருக்கு வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது, அந்த பகுதிகளாவன: டவுண்டவுன், மவுண்ட் ப்ளெஸண்ட், அப்டவுன், கென்னடி ரோட் (ஒரெண்டா கோர்ட் முதல் க்ளிட்டன் சாலையின் தெற்கு வரை), ப்ரமீலியா GO மற்றும் க்வீன் ஸ்ட்ரீட் (சென்ட்டர் ஸ்ட்ரீட் லிருந்து 410 வரை, டிக்ஸீ ரோடு லிருந்து ப்ரம்லி ரோடு வரை மற்றும் டோர்ப்ரம் ரோடு லிருந்து CN யில் லைன் வரை).

நகரத்தின் பொருளாதார அபிவிருத்தி அலுவலகத்திற்குள் பிரத்யேக பிரதான வீதிகளின் மீட்சிக்கான தூதுவரால் இந்த ஆறு முக்கிய வீதியில் உள்ள சமூகத்தினர் ஆதரிக்கப்படுவார்கள். திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்த சமூகத்தினர் தனிப்பயனாக்கப்பட்ட சந்தை ஆராய்ச்சி, தரவுகள் பகுப்பாய்வு ஆகியவை செய்யப்பட்டு, புதிய மற்றும் ஏற்கனவே உள்ள சிறு வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்காக திருப்பிச் செலுத்த தேவையில்லாத நிதி பங்களிப்புகளைப் பெறுவார்கள்.

இந்த திட்டமானது, இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்கப்பட்டு சேர்ப்பிக்கப்படும், மற்றும் முக்கிய தெருவில் உள்ள குடியிருப்புவாசிகள், புதிய தொழில்முனைவோர் மற்றும் ஏற்கனவே உள்ள வணிகங்களுக்கு பொருளாதார வாய்ப்புகளை வழங்கும் அதே வேளையில், துடிப்பான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய உள்ளூர் முக்கிய தெருக்களை உருவாக்கி பராமரிப்பதில் கவனம் செலுத்துகிறது.

கோவிட்-19 பெருந்தொற்றுக்கு பதில்வினையாற்றுமுகமாக, கனடா நாட்டு அரசாங்கமானது, தெற்கு ஒன்ட்டாரியோவுக்கான கூட்டாட்சி பொருளாதார அபிவிருத்தி முகமை [Federal Economic Development Agency for Southern Ontario (FedDev Ontario)] மூலமாக, $23.25-மில்லியன் முதலீட்டினை அறிவித்தது; இது இரண்டு திட்டப்பணிமுறைகள் வழியாக தெற்கு ஒன்ட்டாரியோவில் உள்ள பிரதான வீதிகள் மற்றும் அவற்றிலுள்ள வணிகங்கள் மீட்சி பெற்று மறு உயிரோட்டம் கொடுப்பதற்கென உள்ள இரண்டு ஆண்டுக்கால திட்ட நிகழ்ச்சியாகிய மை மெயின் ஸ்ட்ரீட் (My Main Street ) அமைப்பை நிலை

நாட்டுவதற்கென, கனடியன் புறநகர் நிறுவனம் (Canadian Urban Institute (CUI)) மற்றும் ஒன்ட்டாரியோவின் பொருளாதார அபிவிருத்தியாளர்கள் கவுன்சில் (Economic Developers Council of Ontario (EDCO)) ஆகியவற்றுக்கு வழங்குவதற்காக அறிவிக்கப்பட்டது.

எட்க்கோ (EDCO) மை மெயின் ஸ்ட்ரீட் உள்ளூர் வணிக முடுக்கி (My Main Street Local Business Accelerator) எனும் திட்டப்பணி வழிமுறையை வழங்குகிறது; இது 65 முக்கிய தெருக்களில் உள்ள சமூகங்கள் மறு உயிரோட்டம் பெறுவதற்கென ஆதரவளிக்கிறது மற்றும் தெற்கு ஒன்ட்டாரியோ முழுவதும் உள்ள 650 க்கும் மேற்பட்ட உள்ளூர் வணிகங்களுக்கு திருப்பிச் செலுத்தத் தேவையில்லாத பங்களிப்புகளை வழங்குகிறது.

திட்ட விவரங்கள் மற்றும் கூடுதல் தகவலுக்கு, www.mymainstreet.ca எனும் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது Bec@brampton.ca எனும் மின்னஞ்சல் வழியாக ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோர் மையத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் நகரமானது வாய்ப்புகளுக்கான நகரம் ஆகும்; மேலும் கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கங்களைச் சமாளிப்பதற்கு நாங்கள் இணைந்து பணியாற்றும்போது, எங்கள் உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவளிக்க நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். இதில் அனைத்து மட்ட அரசு மற்றும் சமூக பங்காளிகளின் ஒத்துழைப்பு முக்கிய பங்கு வகிக்கும். மை மெயின் ஸ்ட்ரீட் உள்ளூர் வணிக முடுக்கி (My Main Street Local Business Accelerator) எனும் திட்டத்தின் மூலம் நமது நகரம் முழுவதும் உள்ள ஆறு சமூகங்கள், $945,000 அளவிலான நிதியைப் பெறுவதற்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டவர்களாக இருக்கிறோம். இது உள்ளூர் வணிகத்தை ஆதரிக்கவும், நமது பெரிய நகரத்தில் சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்யவும் உதவும்." ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ஒரு நகரத்தின் பொருளாதாரத்தில் பிரதான தெருவில் உள்ள சமூகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன; இங்குதான் அவை பெரும்பாலும் சமூகத்தை கட்டியெழுப்புதல் மற்றும் உறவுகள் உருவாக்கம் ஆகியவற்றைச் செய்கின்றன. ஃபெட் டெவ் (FedDev) ஒன்ட்டாரியோவில் உள்ள எங்கள் கூட்டாளர்களிடமிருந்து இந்த முக்கிய முதலீட்டினை அடைவதில் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், மேலும் இந்த ஆறு முக்கிய தெருக்களில் உள்ள ப்ராம்ப்ட்டன் சமூகத்தில் உள்ள எங்கள் குடியிருப்புவாசிகள், புதிய தொழில்முனைவோர் மற்றும் ஏற்கனவே உள்ள வணிகங்களுக்கு பொருளாதார வாய்ப்புகளை கொண்டு வரும் என நாங்கள் எதிர்நோக்குகிறோம்.”

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3&4; தலைவர், பொருளாதார மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகருக்கான மை மெயின் ஸ்ட்ரீட் (My Main Street) அமைப்பு $945,000 நிதி பங்களிப்பு செய்வதானது, கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமான தாக்கங்களின் ஊடாக நாம் கடந்து செல்லும்போதும், முன்னேறும்போதும் நமது முக்கிய வீதிகள் வளர்ச்சியடைவதை உறுதிசெய்ய உதவும். இந்த ஆறு வீதியில் உள்ள சமூகத்தினரும் நமது நகரத்தின் பொருளாதாரத்திற்கு மையமாக உள்ளனர்; மேம்பட்ட வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம், எங்கள் முழு நகரமும் பயனடையும்."

*- பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1&5; துணைத் தலைவர், பொருளாதார மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

இந்த நகரத்தில், கணிசமான உள்ளூர் முதலீடுகள் மற்றும் கூட்டாண்மை மூலம் ப்ராம்ப்ட்டன் நகரம் முழுவதும் வசிப்பவர்கள் மற்றும் வணிகங்களுக்கு வாய்ப்பை வழங்க நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். மை மெயின் ஸ்ட்ரீட் உள்ளூர் வணிக முடுக்கி (My Main Street Local Business Accelerator) எனும் திட்டப் பங்களிப்பானது, நமது சமூகத்திற்கு முதலீட்டைக் கொண்டு வந்து, நமது நகரத்தின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கும். நமது நகரம் செழிக்கத் தேவையான சாதனங்களைக் கொண்டிருப்பதை உறுதிசெய்ய, நாங்கள் எங்கள் கூட்டாளர்களுடன் தொடர்ந்து பணியாற்றுவோம்."

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"பெருந்தொற்று பரவலின் விளைவாக பிரதான தெருவில் உள்ள வணிகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை கனடா அரசாங்கம் உணர்ந்து அங்கீகரித்துள்ளது; இனிமேலும் ஏற்படக்கூடிய சிரமங்களைத் தணிக்க, நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். மை மெயின் ஸ்ட்ரீட் (My Main Street) போன்ற திட்டங்கள், உள்ளூர் வணிகங்களுக்கு முக்கியமான நிதி மற்றும் சேவைகளை வழங்குகின்றன; ஏனெனில் அவை புதிய மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வாய்ப்புகளை மாற்றியமைத்து உருவாக்குவதற்கான வழிகளைக் கண்டறிந்து, தங்களின் முக்கிய வீதியில் உள்ள சமூகத்தினர் மீண்டும் கட்டமைத்துக் கொள்ளவும், துடிப்பினை மீட்டெடுக்கவும் உதவும்."

*- மாண்புமிகு ஹெலினா யாஸ்ஸெக், தெற்கு ஒன்ட்டாரியோவுக்கான கூட்டாட்சி பொருளாதார வளர்ச்சி முகமைக்கு பொறுப்பு வகிக்கும் அமைச்சர்.*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள்

சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

MEDIA CONTACT

**ஊடக தொடர்பு**

மோனிக்காதுக்கல்

ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு

யுக்திரீதியான தகவல் தொடர்பு

ப்ராம்ப்ட்டன் நகரம்

905-874-3426 | Monika.Duggal@brampton.ca